செ.வெ.எண்:25 நாள்: 10.10.2018

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**திருமருகல் ஒன்றியம் காரையூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்புத் திட்ட முகாமில் 93 பயனாளிகளுக்கு ரூ.8.22 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஒன்றியம் காரையூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (10.10..2018) நடைபெற்றது.

இம்மக்கள் தொடர்பு முகாமில் தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் சிறுகண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு, அரசின் திட்டங்கள் குறித்தும் அதனை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் விளக்கமளித்தனர்.

இம்மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப. அவர்கள் பேசியதாவது: “ இந்த மக்கள் தொடர்பு முகாம் இந்தியாவிலேயே முதன் முறையாக 1969 முதல் தமிழகம் முழுவதும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் மாதம்தோறும் ஒரு கிராமம் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டு, மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் துறை சார்ந்த பல திட்டங்கள் பற்றி தொடர்புடைய அலுவலர்களே மக்களுக்கு தெரியப்படுத்துகிறார்கள்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒவ்வொரு வாரமும் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனுக்களை அளித்து அதன் மூலம் பொதுமக்கள் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 88207 பயனாளிகளுக்கு பிரதி மாதம் ரூ.1000 வீதம் ரூ.8.82 கோடி வழங்கப்படுகிறது. நாகப்பட்டினம் வட்டம் காரையூர் கிராமத்தில் 101 நபர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வீதம் ரூ1,01,000/- வழங்கப்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 4,47,962 குடும்ப அட்டைதாரர்களுக்கு Smart Card வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை மூலம் PMAY திட்டத்தின் கீழ் 22970 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.390.49 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித்துறை மூலம் தனிநபர் இல்ல கழிப்பறை திட்டத்தின் கீழ் 85,136 கழிவறைகள் ஒதுக்கிடு செய்யப்பட்டு ரூ.56.18 கோடி வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் 3973 பயனாளிகளுக்கு பிரதி மாதம் ரூ.1500/- வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.6.40 கோடி வழங்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் 9953 மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. 2018-19 ஆம் ஆண்டில் 270 புதிய மகளிர் சுய உதவிக்குழுக்கள் துவங்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களின் வங்கிக்கடன் இணைப்பின் மூலமாக 2018-2019 ஆம் ஆண்டில் நாளது தேதி வரை 3016 குழுக்களுக்கு ரூ.98.53 கோடி வங்கிகள் மூலமாக கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை சார்பில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டில் 14526 மாணவியர்களுக்கு ரூ.59.20 இலட்சம் நிதிஉதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுகாதாரத்துறை சார்பில் 2017-18 ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பிறந்த 8168 குழந்தைகளுக்கு அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேளாண்மைத் துறை சார்பில் குறுவை தொகுப்பு திட்டத்தின் (2018) கீழ் ரூ.16.07 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. PMKSY நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் இதுவரை 4989 விவசாயிகளுக்கு 7130 ஹெக்டேர் பரப்பிற்கு ரூ.78.30 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத்துறை சார்பில் நாகப்பட்டினம் வட்டம் கங்களாஞ்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 2016-17 ஆம் ஆண்டிற்கு பயிர் காப்பீடு இழப்பீட்டு தொகையாக 995 நபர்களுக்கு ரூ.34.50 இலட்சம் பயிர் காப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. சமூக நலத்துறை சார்பில் 2017-18 ஆம் ஆண்டில் 1550 பயனாளிகளுக்கு ரூ.5.92 கோடி மதிப்பிலான திருமண நிதியுதவியுடன் கூடிய தாலிக்குத் தங்கம் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1437 பயனாளிகளுக்கு ரூ.3.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு அரசு சார்பில் எல்லா திட்டங்களும் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

இன்றைய மக்கள் தொடர்புத் திட்ட முகாமிற்கு முன்னரே 85 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 46 மனுக்கள் ஏற்கப்பட்டு, 39 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இன்றைய தினம் நடைபெறும் மக்கள் தொடர்புத் திட்ட முகாமில் பெறப்பட்டுள்ள 66 மனுக்கள் உரிய அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, முடிவான பதில் விரைவில் தெரிவிக்கப்படும். பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தி வரும் நல்ல பல நலத்திட்டங்களை பயன்படுத்திக் கொண்டு முன்னேற்றமடைய வேண்டும்.'' என தெரிவித்தார்.

இம்முகாமில் மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.4170 மதிப்புள்ள இலவச தையல் இயந்திரமும், வருவாய்த் துறை சார்பில் 65 பயனாளிகளுக்கு ரூ.6.91 லட்சம் மதிப்பிலான உதவித்தொகைகளையும் மற்றும் 12 பயனாளிகளுக்கு ரூ.60 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா வீட்டுமனைப் பட்டாவும், வேளாண்மைத்துறை சார்பில் 5 பேருக்கு ரூ.67,072 மதிப்பிலான **Sprinkler Pipe**, **Oil Engine**, நெல் நுண்ணோட்டம், உயிர் உரங்கள் ஆகியவைகளும், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 10 பேருக்கு தாது உப்புக்கலவைகளும் என மொத்தம் 93 பயனாளிகளுக்கு ரூ.8,22,242 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

முன்னதாக தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட சிறுகண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் சார் ஆட்சியர் திரு.கமல் கிஷோர்,இ.ஆ.ப., தனித்துணை ஆட்சியர்(சமூகப் பாதுகாப்புத்திட்டம்) திருமதி.எம்.வேலுமணி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ஆர்.விக்டர் மரிய ஜோசப், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், நாகப்பட்டினம் வட்டாட்சியர் திரு.இளங்கோவன், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பொது மக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**